සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| තෙවන වාර පරීක්ෂණය 2020 | 11 ශ්‍රේණිය |
| மூன்றாம் தவணைப் பரீட்சை 2020 | தரம் 11 |
| **Third Term Test 2020** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| ගෘහ ආර්ථික විද්‍යාව | II | පැය දෙකයි |
| மனைப் பொருளியல் | II | இரண்டு மணித்தியாலம் |
| **Home Economics** | **II** | ***Two hours*** |

❖ **முதலாம் வினா உட்பட வேறு நான்கு வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக**

**01.** சமரி தரம் 10ல் கல்வி கற்கும் மாணவி ஆவதுடன், அவரது தாய் தந்தை இருவரும் ஆசிரியர் தொழிலில் இருப்பவர்கள் ஆவர், சமரிக்கு முதலாம் தரத்தில் கல்வி கற்கும் சகோதரனும் உள்ளார், அவர்களது பாட்டியும் அவர்களுடன் வசிக்கிறார். இவர்கள் இரு மாடி கட்டிடம் கொண்ட வீட்டில் மேல் மாடியை வாடகைக்கு விடுத்துள்ளார் அதனால் அவர்களுக்கு வருமானம் கிடைக்கிறது.

1. இக்குடும்பம் அன்றாடச் செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவசியமான மனித வளங்கள் இரண்டைக் குறிப்பிடுக
2. சமரியின் சகோதரனுக்கு பாடசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு இறைச்சி ரொட்டி தயாரித்து வழங்கினார் அதில் அடங்கியிருக்கும் போசணைப் பதார்த்தங்கள் இரண்டைக் குறிப்பிடுக
3. அப்போசணை பதார்த்தங்களின் சமிபாட்டு இறுதி நிலையை குறிப்பிடுக
4. எனது மனையில் வரவேற்பு அறையில் தளபாடம் இடப்படுத்தல் இன் போது பயன்படும் வடிவமைப்பு கோட்பாடுகள் 2 தருக
5. பாட்டிக்காக உணவு தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் 2 தருக
6. வரையறுக்கப்பட்ட இட வசதி உடைய ஒரு மனைக்கு பொருத்தமான தளபாடங்கள் 2 தருக
7. கட்டிளமை பருவத்தினரின் மனவெழுச்சி விருத்தியில் குணங்களை வெளிக்காட்டும் விரும்பத்தக்க விரும்பத்தகாத மனவெழுச்சிகள் 2 வீதம் தருக
8. விளிம்பு பூரணப்படுத்தும் முறைகள் இரண்டைத் தருக
9. குடும்பத்தின் ஒழுக்க விழுமியங்களை கட்டியெழுப்புவதற்கு பாட்டியின் பொறுப்புக்கள் இரண்டைத் தருக
10. வீட்டின் அன்றாடத் தேவைக்கு சமரியின் தந்தை வீட்டுத்தோட்டத்தில் பயிரிடக்கூடிய தானியங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (2 x10 )= 20 புள்ளிகள்

**02.**

1. குழந்தை உடை தைப்பதற்கு துணியை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
2. அலங்கார தையல்கள் முறை 3 யை குறிப்பிட்டு தைக்கும் முறையை படம் மூலம் விளக்குக (4 புள்ளிகள்)
3. துணை அலங்காரங்கள் நிர்மாணிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு மூன்றை குறிப்பிடுக (3 புள்ளிகள்)

03.

1. கொழுப்பில் சமைக்கும் பிரதான முறைகள் 2 குறிப்பிட்டு அவற்றில் ஒன்றுக்கு உதாரணம் தந்து விளக்குக (3 புள்ளிகள்)
2. ஒமேகா 3 அடங்கிய உணவை உட்கொள்வதன் பயன்கள் மூன்றை தருக. (4 புள்ளிகள்)
3. உணவு வேலையை திட்டமிடுவதற்கு பயன்படும் மூலாதாரம் ஒன்றைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

04.

1. விளக்குக

   i. நீர் செயற்பாடு ii. புற பிரசாரணம் (3 புள்ளிகள்)

2. பின்வரும் உணவுகளை தயாரிக்கும்போது ஏற்படும் வெப்பம் ஏற்றல் முறையினைத் தருக.

   சுருட்டப்பம், சோறு, கேக் (4 புள்ளிகள்)

3. உணவு பழுதடைதல் செல்வாக்கு செலுத்தும் நுண்ணங்கிகள் மூன்றை குறிப்பிடுக (3 புள்ளிகள்)

05.

1. மனை அலங்காரத்தின் போது பயன்படும் வரை கோட்டில் வெளிக்காட்டும் உணர்வுகள் மூன்றை குறிப்பிடுக (3 புள்ளிகள்)
2. வீட்டுத் தோட்டத்தை பாதுகாக்கும் முறைகள் மூன்றைத் தருக (3 புள்ளிகள்)
3. பின்வருவனவற்றை விளக்குக

   01. குறுக்கு காற்றோட்டம் 02. இணைந்த அலகு (4 புள்ளிகள்)

06.

1. குழந்தையின் போாசணைக்காக தாய்பால் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)
2. சிசு பருவத்தில் தெறிவினை செயற்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)
3. கீழ் வரும் நோய்களுக்கு பாதுகாப்பு முறைகள் யாது?

   i. கயரோகம் ii. போலியோ iii. ஜேர்மன் சின்னமுத்து (4 புள்ளிகள்)

07.

1. உலக சுகாதார அமைப்பின் கூற்றுக்கு இணங்க இனப்பெருக்க சுகாதாரம் என்பதால் குறிப்பிடப்படுவது யாது? (4 புள்ளிகள்)
2. சமூகத்தில் பெரும்பாலும் பாலியல் தொடர்பு மூலம் ஏற்படும் 4 நோய்களை குறிப்பிடுக (3 புள்ளிகள்)
3. இளமைப் பருவத்தில் ஏற்படும் சமூக விருத்தியை பிரதிபலிக்கும் காரணிகள் மூன்று (3 புள்ளிகள்)